සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Tamil

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	**தமிழ்மொழியும் இலக்கியமும்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. தானமும் தவமும் தழைத்து வாழ்க - இதில் தானம் என்பதற்கு ஒத்த சொல்.
1. கொடை 2. நன்மை 3. செல்வம் 4. அழகு

02. அவர் கருமமே கண்ணாயிருந்தார். இங்கு கருமம் என்ற சொல்லின் பொருள்.
1. பயன் 2. பணி 3. நோக்கம் 4. உழைப்பு

03. தமக்கு முன் வாழ்ந்த விஞ்ஞானிகளைப் போற்றினார். 'போற்றுதல்' என்பதன் எதிர்க்கருத்து.
1. ஏற்றுதல் 2. வாழ்த்துதல் 3. தூற்றுதல் 4. பழித்தல்

04. மழவராயன் என்ற பெயருடைய ஒருவன் இருந்தான். - ஒருவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்.
1. ஒருத்தி 2. ஒருவள் 3. ஒருவி 4. ஒருத்தள்

05. திருக்குறளின் பத்துக் கட்டளைக்குள் அடங்காதது எது.
1. பொய்யைச் சொல்லாதே 2. புலாலை உண்ணாதே
3. களவை நினையாதே 4. கல்வியை விடாதே

06. ஆமை வீணில் உயிரைத் துறந்ததே. இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள்.
1. வீணில் 2. உயிரை 3. துறந்ததே 4. ஆமை

07. கடல், சிங்கம், மழைத்துளி என்ற பொருள்களை முறையே தருவது.
1. ஆழி, ஆளி, ஆலி 2. ஆலி, ஆளி, ஆழி
3. ஆளி, ஆழி, ஆலி 4. ஆலி, ஆழி, ஆளி

08. கோடு ஏறி கம்பி எண்ணுகிறான் - கம்பி எண்ணுதல் என்ற மரபுத் தொடரின் பொருள்.
1. கம்பிகளை எண்ணுதல் 2. தப்பிக்க முயலுதல்
3. சிறையில் வாழுதல் 4. விடுதலைப் பெறுதல்

09. வாழ்ந்து பாருங்கள் - என்பது.
1. தன்மை ஒருமை 2. முன்னிலை ஒருமை
3. தன்மை பன்மை 4. முன்னிலை பன்மை

10. பிரச்சினைகளைக் கண்டு பயப்படக் கூடாது. என்ற பொருள் தரும் புதிய ஆத்தி சூடி.
1. சுமையினுக்கு இளைத்திடேல் 2. கெடுப்பது சோர்வு
3. ஓய்தல் ஒழி 4. சிதையா நெஞ்சு கொள்

Past Papers Wiki

11. கறையான்கள் அடங்கி ஒடுங்கி அடிமைகளாகின - இதில் அடங்கி ஒடுங்கி என்பது.
    1. இரட்டைக்கிளவி
    2. இணைமொழி
    3. அடுக்குத்தொடர்
    4. அடுக்கிடுக்குத்தொடர்

12. ய், ர், ல், வ், ழ், ள் என்பது,
    1. உயிர் எழுத்துக்கள்
    2. வல்லின மெய்கள்
    3. மெல்லின மெய்கள்
    4. இடையின மெய்கள்

13. இருபாலுக்கு பொதுவான சொல்.
    1. மாணவன்
    2. ஆசிரியர்
    3. தேவி
    4. தம்பி

14. "முயற்சி வெற்றி தரும்." என்ற கருத்தைத் தரும் பழமொழி,
    1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
    2. ஆனைக்கும் அடி சறுக்கும்
    3. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
    4. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைத் தொடரும்.

15. சேர, சோழ, பாண்டியர் எனப்படுவோர்.
    1. முக்கனி
    2. முக்கொடி
    3. முத்தமிழ்
    4. மூவேந்தர்

16. ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல யானை மேய்ப்பவன்,
    1. பாகன்
    2. பாங்கன்
    3. மாலுமி
    4. வலவன்

17. பாற்குடம் என்பதைப் பிரித்து எழுதினால்.
    1. பாள் + குடம்
    2. பால் + குடம்
    3. பாற் + குடம்
    4. பா+ குடம்

18. ஆசிரியர் நேற்று, நிறையுணவு பற்றி
    1. கற்பிப்பார்
    2. கற்பிக்கிறார்
    3. கற்பித்தார்
    4. கற்பார்

19. இன்டர்நெட் - Internet என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ்க்கலைச் சொல்.
    1. வலைத்தளம்
    2. இணையம்
    3. வையக விரிவு வலை
    4. மின்னஞ்சல்

20. அ. மிக மிக பச்சையான பாலன் முன்னுக்கு வருகிறான்.
    ஆ. பள்ளியிலிருந்து சின்னஞ் சிறிய சிறுவர்கள் வருகின்றார்கள்.
    இ. அந்தப் பச்சைக்குப் பெயர் இராமன்.
    ஈ. அவர்கள் பச்சைப் பாலர்கள்.
    1. ஆ, ஈ, அ, இ
    2. ஈ, ஆ, இ, அ
    3. இ, அ, ஆ, ஈ
    4. அ, ஆ, இ, ஈ

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- முதலாம், இரண்டாம் வினா உட்பட எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.
    1. கல்வியின் சிறப்பு
    2. தேய்ந்து, உடைந்த தும்புத்தடியின் சுயசரிதை
    3. நாம் சென்ற சுற்றுலா
    4. நான் விஞ்ஞானியானால்

(20 புள்ளிகள்)

02. வெளியூரில் வசிக்கும் உமது மாமாவின் மகன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததைப் பாராட்டி 50 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    1. "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது யாருடைய வாக்கு?
    2. பரலி சு. நெல்லையப்பர், பாரதியாரால் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
    3. குறிஞ்சித் தென்னவன் எழுதிய குறும்பா எது?
    4. "நாங்கள் போய் விட்டால் உங்களால் வாழ முடியாது" இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது.
    5. இராமனின் பெற்றோரைக் குறிப்பிடுக.

(5x2=10 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியம் எழுதுக.
    1. உழைப்பு
    2. அரட்டை
    3. எச்சரிக்கை
    4. அரியணை
    5. வெள்ளம்

(5x2=10 புள்ளிகள்)

05. பின்வரும் தொடர்களுக்கான உதாரணங்களை தெரிவு செய்து எழுதுக.

அங்குமிங்கும், பெரியபெரிய, அத்திபூத்தாற்போல, கடகட, மலர்ந்தது, நில்நில், சலசல, மூலைமுடுக்கு, மழையைக் கண்ட பயிர் போல, ஓடினார்.

1. இரட்டைக் கிளவி - ..... , ...
2. அடுக்குத் தொடர் - ..... , ...
3. உவமைத் தொடர் - ..... , ...
4. இணைமொழி - ..... , ...
5. வினைத் தொடர் - ..... , ...

(1x10=10 புள்ளிகள்)

06. 1. கல் + குகை என்ற சொற்களில் நிலைமொழி எது? வருமொழி எது?
    2. "சற்றே தாமதித்தான் அந்த இராமன்..." இவ்வாக்கியத்தின் எழுவாய் எது? பயனிலை எது?
    3. உயிர் எழுத்துக்களின் இரு வகைகளும் எவை?
    4. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
       "ஆனந்த மாயுண்டேன்"
    5. நட்சத்திரங்கள் மின்னின – என்ற வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக்கி எழுதுக.

(10 புள்ளிகள்)

07. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பூரணமான விடை தருக.

மாலையில் மேற்குச் சிவக்கும் - எங்கும்
மஞ்சள் வெயிலாலே கோலங்கள் போடும்
வேலையில் இருந்து வருவோர் - வந்து
வீட்டினில் ஆறுதல் பெற்றிடும் வேளை

தனித்தனிப் பாடங்கள் கற்று - நாம்
தாவியே கொப்பியைத் தேடியெடுப்போம்
இனிப்பான பண்டங்கள் தந்து - அப்பா
எங்களை மகிழ்வித்து கலந்துரை செய்வார்

1. இப்பாடலில் கூறப்படும் காட்சி எது?
2. அப்பா பிள்ளைகளை மகிழ்விக்கக் கொடுப்பது என்ன?
3. பிள்ளைகளின் செயற்பாடு யாது?
4. இப்பாடலில் கோலம் போடுவது எதுவெனக் கூறப்படுகிறது.
5. பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.
    1. வேலை
    2. வேளை

(5x2=10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

பாடம் தமிழ்மொழியும் இலக்கியமும்

விடைப்பத்திரம்

Tamil தரம் - 06

பகுதி – I

01. 1	06. 2	11. 2	16. 1
02. 2	07. 1	12. 4	17. 2
03. 3	08. 3	13. 2	18. 3
04. 1	09. 4	14. 3	19. 2
05. 4	10. 1	15. 4	20. 1

(2x20= 40 புள்ளிகள்)

பகுதி – II

01. கட்டுரைப் புள்ளித்திட்டம்

பொருள் பொருத்தம்	-	09
கட்டுரை நுட்பம்	-	06
மொழிச் செம்மை	-	04
சொல் எண்ணிக்கை	-	01
		20 புள்ளிகள்

02. கடிதம்

அமைப்பு	-	03	(முகவரி, விளிப்பு, முடிவுரை)
விடயம்	-	06	
மொழிநடை	-	01	
		10 புள்ளிகள்	

03. 1. திருவள்ளுவரின் வாக்கு
2. தம்பி என அழைக்கப்பட்டார்.
3. 'தகரம்'
4. கறையான்களால் ஈசல்களுக்கு கூறப்பட்டது.
5. தாய் - கோசலை / கௌசல்யா
   தந்தை -
   தசரதன்

(5x2= 10 புள்ளிகள்)

04. பொருள் புலப்பட எழுதப்படும் வாக்கியங்களின் பிழையற்ற தன்மையை அவதானித்து புள்ளியிடுக.

(5x2= 10 புள்ளிகள்)

05. 1. இரட்டைக்கிளவி - கடகட, சலசல
2. அடுக்குத் தொடர் - பெரியபெரிய, நில்நில்
3. உவமைத்தொடர் - அத்திபூத்தாற்போல, மழையைக் கண்ட பயிர் போல
4. இணைமொழி - அங்குமிங்கும், மூலைமுடுக்கு
5. வினைத்தொடர் - மலர்ந்தது, ஓடினார்

(5x2= 10 புள்ளிகள்)

06. 1. நிலைமொழி - கல்
வருமொழி - குகை
2. எழுவாய் - இராமன்
பயனிலை - தாமதித்தான்
3. உயிர்க்குறில், உயிர்நெடில்
4. ஆனந்தமாய் + உண்டேன்
5. நட்சத்திரம் மின்னியது (5x2= 10 புள்ளிகள்)

07. 1. சூரிய அஸ்தமனக் காட்சி / மாலைக்காட்சி
2. இனிப்பான பண்டங்கள்
3. கொப்பிகளைத் தேடி, தனித்தனியாகப் பாடங்கள் கற்றல்.
4. சூரியன்
5. 1. வேலை - பணி, தொழில்
2. வேளை - நேரம், காலம், பொழுது (10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank